### மண்டலம் - 5. 9 - க்குட்பட்ட சில பகுதிகளில்

# கழிவுநீர் உந்து நிலையங்கள் செயல்படாது!

## சென்னை குடிநீர் வாரியம் தகவல்!

சென்னை, ஜூன் 21- மண்டலம் - 5 (இராயபுரம்) காந்தி இர்வின் சாலையில் கழிவுநீர் உந்து குழாயில் ஏற்பட்டுள்ள கசிவை சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால் 21.06.2025 அன்று இரவு 10 மணி முதல் 22.06.2025 காலை 10.00 மணி வரை (12 மணி நேரம்) மண்டலம் - 5 மற்றும் மண்டலம் 9 க்குட்பட்ட சில பகுதிகளில் கீழ்க்கண்ட கழிவுநீர் உந்து நிலையங்கள் தற்காலிகமாக செயல்படாது.

எனவே, இராயபுரம் மற்றும் தேனாம்பேட்டை மண்டலங்களுக்குட்பட்ட இடங்களில் கழிவுநீர் தொடர்பான புகார்களுக்கு கீழ்க்காணும் பகுதி அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

வ. எண் மண்டலம் பகுதிப் பொறியாளர் கைபேசி எண் கழிவுநீர் உந்து நிலையங்கள்

1. மண்டலம் 5 (இராயபுரம்) 8144930905 எல்.ஜி சாலை கழிவுநீர் உந்து நிலையம், லிங்க் சாலை கழிவுநீர் உந்து நிலையம், தெற்கு கூவம் சாலை கழிவுநீர் உந்து நிலையம், காந்தி இர்வின் சாலை கழிவுநீர் உந்து நிலையம்.

2. மண்டலம் - 9 (தேனாம்பேட்டை) 8144930909 கிரீம்ஸ் ரோடு கழிவுநீர் உந்து நிலையம், கிரியப்பா சாலை கழிவுநீர் உந்து நிலையம், ஜி.என் செட்டி ரோடு கழிவுநீர் உந்து நிலையம், குமரப்பா சாலை கழிவுநீர் உந்து நிலையம், சுதந்திர தின பூங்கா கழிவுநீர் உந்து நிலையம், சாலை தீவு கழிவுநீர் உந்து நிலையம்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

---



# தி.மு.க.
# இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 28.06.2025 சனிக்கிழமை | மாலை 4.00 மணி | திருநெல்வேலி கிழக்கு | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–9–இல் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்திலுள்ள நாங்குநேரி மற்றும் அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 28.06.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | நாங்குநேரி | எஸ்.ஆர்.மஹால், நாங்குநேரி. |
| 29.06.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | அம்பாசமுத்திரம் | எஸ்.எல்.எம்.திருமண மண்டபம், வீரவநல்லூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 18-06-2025

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி

---



# தி.மு.க.
# இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### சென்னை மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ப.பிரகாஷ் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், கட்டமைப்புகளின் நாயகர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு சென்னை மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | பகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 23.06.2025 | சேப்பாக்கம் | நாராயணன் நாயக்கன் தெரு, புதுப்பேட்டை | கோ.வி.லெனின் ச.பரத் |
| 2 | 24.06.2025 | ஆயிரம்விளக்கு கிழக்கு | தருமாபுரம், தி.நகர் | வழக்கறிஞர் தாயகம் கவி எம்.எல்.ஏ, மு.மு.முஸ்தாக் |
| 3 | 25.06.2025 | அண்ணா நகர் வடக்கு | புதிய ஆவடி சாலை, டாக்டர் அம்பேத்கர் நகர். | சூர்யா கிருஷ்ணமூர்த்தி அ.தா.டெக்சின் ரொமேரியோ |
| 4 | 28.05.2025 | அண்ணாநகர் தெற்கு | பெருமாள் கோயில் தெரு, அமைந்தகரை. | மருத்துவர் ப.மீ.யாழினி க.ஹேமநாதன் |
| 5 | 02.07.2025 | திருவல்லிக்கேணி | சேக் தாவுத் தெரு, திருவல்லிக்கேணி. | பொள்ளாச்சி சித்திக் தி. கோகுல் |
| 6 | 03.07.2025 | அண்ணா நகர் தெற்கு | பெரியார் பாதை பிரதான சாலை, பத்மநாப நகர், சூளைமேடு. | தமிழ்.கா.அமுதரசன் மு. ரோஜா |
| 7 | 04.07.2025 | ஆயிரம்விளக்கு மேற்கு | சௌராஷ்ட்ரா நகர் முதல் தெரு (நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் அருகில்) | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி செ.ஜோதி |

**சென்னை**
நாள் : 19-06-2025

கலைஞர் 100 1924 - 2023



---

